**பொள்ளாச்சி நகராட்சி**
**அவசரக் கூட்டம்**

**30.11.2023 தேதி வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு பொள்ளாச்சி நகராட்சி நகர மன்ற கூட்டரங்கில் நடைபெற்ற அவசரக் கூட்டம் நடவடிக்கைகள்**

<table>
<tr><th>வ. எண்</th><th>பொருள் விபரம்</th><th>தீர்மானம்</th></tr>
<tr><td>1</td><td>பொள்ளாச்சி நகராட்சிக்குட்பட்ட கிழக்கு மற்றும் மேற்கு பகுதியில் உள்ள வார்டுகளில் கால்வாய், சிறுபாலம், சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால் சீரமைக்க கோரி நகர்மன்றதலைவர் மற்றும் வார்டு நகரமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின்படி கீழ்க்கண்ட பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு பொது நிதியின் கீழ் மேற்கொள்ளமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .<br><br>
<table>
<tr><th>வ. எண்</th><th>வார்டு</th><th>பணியின் விவரம்</th><th>மதிப்பீடு ரூ.இலட்சத்தில்</th></tr>
<tr><td>1</td><td>06</td><td>பொள்ளாச்சி நகராட்சி டி.கோட்டாம்பட்டி பள்ளி சாலையில் பழுதடைந்துள்ள சிறுபாலத்தை சீரமைத்தல்.</td><td>2.70</td></tr>
<tr><td>2</td><td>09</td><td>பொள்ளாச்சி நகராட்சி அன்னா அவென்யூ பகுதியில் கால்வாய் உயர்த்திக் கட்டுதல்</td><td>0.80</td></tr>
<tr><td>3</td><td>16</td><td>பொள்ளாச்சி நகராட்சி பழனியப்பன் லே அவுட் பகுதியில் பழுதடைந்துள்ள சிறுபாலத்தை சீரமைத்தல்.</td><td>1.80</td></tr>
<tr><td>4</td><td>16</td><td>பொள்ளாச்சி நகராட்சி ஜீவா நகர் பகுதியில் பழுதடைந்த கான்கிரிட் சந்தை சீரமைத்தல்.</td><td>4.60</td></tr>
<tr><td>5</td><td>23</td><td>பொள்ளாச்சி நகராட்சி தவரோஜினி நகர் (ஆர்.பி.எஸ் நகர்) பகுதியில் பழுதடைந்துள்ள கால்வாய் சீரமைத்தல்</td><td>1.30</td></tr>
<tr><td>6</td><td>29</td><td>பொள்ளாச்சி நகராட்சி நேரு நகர் பகுதியில் பேவர் பிளாக் அமைத்தல்.</td><td>7.80</td></tr>
<tr><td>7</td><td>32</td><td>பொள்ளாச்சி நகராட்சி சபரி நகர் பகுதியில் பழுதடைந்துள்ள சிறுபாலத்தை சீரமைத்தல்.</td><td>2.00</td></tr>
</table>
<br><u>அலுவலகக்குறிப்பு :</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>தீர்மானம் எண்.778<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | 2. மேற்காணும் பணியின் மதிப்பீட்டுத் தொகையினை பொது நிதியில் மேற்கொள்ளுவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண்:**9917/2023/இ1** | |
| 2 | பொள்ளாச்சி நகராட்சிக்கு சொந்தமான ஆணையாளர் குடியிருப்பில் உள்ள கட்டிடத்தின் மேற்கூரைப் பகுதியில் உள்ள ஓடுகள் உடைந்து Weathering Course பழுதடைந்துள்ளதை சரிசெய்யவும், தரைப்பகுதியில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2,10,000/- க்கு நகரமன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>ந.க.எண்:**9531/2023/இ1** | **தீர்மானம் எண்.779<br>அனுமதிக்கப்பட்டது** |
| 3 | பொள்ளாச்சி நகராட்சி வார்டு எண்.06 ஈஸ்வரன் கோவில் பகுதிக்கு புதிதாக 140mm PVC Pipe Line 130 மீட்டர் தூரத்திற்கு குடிநீர் பகிர்மான குழாய் அமைக்கும் பணி மேற்கொள்ள ரூ 80,000./ (ரூபாய் எண்பதாயிரம் மட்டும்) க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணியினை குடிநீர் வழங்கல் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்:**9951/2023/இ1** | **தீர்மானம் எண்.780<br>அனுமதிக்கப்பட்டது** |
| 4 | பொள்ளாச்சி நகராட்சி வார்டு எண்.20 SRM மில் ரோடு பகுதிக்கு புதிதாக 60mm PVC Pipe Line 90 மீட்டர் தூரத்திற்கு கிணற்றுநீர் பகிர்மான குழாய் அமைக்கும் பணி மேற்கொள்ள ரூ.50,000/-(ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணியினை குடிநீர் வழங்கல் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: **9949 /2023/இ1** | **தீர்மானம் எண்.781<br>அனுமதிக்கப்பட்டது** |
| 5 | பொள்ளாச்சி நகராட்சி வார்டு எண்.25 பொட்டுமேடு பகுதிக்கு புதிதாக 60mm PVC Pipe Line 170 மீட்டர் தூரத்திற்கு கிணற்றுநீர் பகிர்மான குழாய் அமைக்கும் பணி மேற்கொள்ள ரூ. 1,00,000/-(ரூபாய் ஒருலட்சம் மட்டும்) க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | **தீர்மானம் எண்.782<br>அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணியினை குடிநீர் வழங்கல் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்:**9950/2023/இ1** | |
| 6 | பொள்ளாச்சி நகராட்சி வார்டு எண்.32 வெள்ளையம்மாள் லே அவுட் பகுதிக்கு புதிதாக 60mm PVC Pipe Line 300 மீட்டர் தூரத்திற்கு கிணற்றுநீர் பகிர்மான குழாய் அமைக்கும் பணி மேற்கொள்ள ரூ 1,50,000/-(ரூபாய் ஒருலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணியினை குடிநீர் வழங்கல் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்:**9945/2023/இ1** | **தீர்மானம் எண்.783 அனுமதிக்கப்பட்டது** |
| 7 | பொள்ளாச்சி நகராட்சி குடிநீர் விநியோகத்தில் அம்பராம்பாளையம் தலைமை நீரேற்று நிலையம், மார்க்கெட் ரோடு நீர் உந்து நிலையம் மற்றும் நீர் தேக்க தொட்டிகளில் சேகரம் செய்யப்படும் குடிநீரில் கிருமி நாசினியாக திரவ குளோரின் வாயு , Hypo Chlorine Liquid மற்றும் பிளிச்சிங் பவுடர் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்காண் குளோரின் பொருட்களை ஒருவருட கால (2023-24) உபயோகத்திற்கு தேவயான அளவினை வாங்கவும்,இதற்க்கான உத்தேச மதிப்பீடு ரூ.12.00 இலட்சம் செலவினதிற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணியினை குடிநீர் வழங்கல் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்:**9946/2023/இ1** | **தீர்மானம் எண்.784 அனுமதிக்கப்பட்டது** |
| 8 | பொள்ளாச்சி நகராட்சி வார்டு எண்.36 சரண்யா கார்டன் பகுதிக்கு புதிதாக 140mm PVC Pipe Line 150 மீட்டர் தூரத்திற்கு குடிநீர் பகிர்மான குழாய் அமைக்கும் பணி மேற்கொள்ள ரூ.1,30,000/-(ரூபாய் ஒரு இலட்சத்து முப்பதாயிரம் மட்டும் ) க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணியினை குடிநீர் வழங்கல் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்:**9948/2023/இ1** | **தீர்மானம் எண்.785 அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| 9 | பொள்ளாச்சி நகராட்சி பகுதிகளுக்கு, விநியோகிக்கப்படும் குடிநீரானது, அம்பராம்பாளையம் தலைமை நீரேற்று நிலையத்தில் ஆழியார் ஆற்றில் இருந்து RAW Water–ஆக உறிஞ்சப்பட்டு, அங்குள்ள Water Treatment Plant–யில் சுத்திகரிப்பு செய்யப்பட்டு நாள் ஒன்றிற்கு 10.5 MLD குடிநீரானது, நீரேற்றம் செய்யப்பட்டு, நகர்பகுதிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது. அவ்வாறு சுத்திகரிப்பு செய்வதற்கு தேவையான ஆலம் (Alam) கட்டி ஒருவருட கால (2023–24) உபயோகத்திற்கு தேவையான அளவினை வாங்கவும்,இதற்க்கான உத்தேச மதிப்பீடு ரூ .15.00 இலட்சம் செலவினதிற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணியினை குடிநீர் வழங்கல் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: **9947/2023/இ1** | **தீர்மானம் எண்.786**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 10 | பொள்ளாச்சி நகராட்சி வார்டு எண்.36 அமைதி நகரில் உள்ள கழிப்பறைக்கு ஆழ்துளை கிணறு அமைக்கும் பணி நடைபெற்றது. அவ்வாறு அமைக்கப்பட்ட ஆழ்துளை கிணற்றில் அதிகளவு நீர் உள்ளதால் மேற்படி கழிப்பறைக்கு போக அருகில் உள்ள MGR நகர், அமைதி நகர், ஓம் சக்தி நகர் ஆகிய பகுதிக்கு மேற்படி ஆழ்துளை கிணற்றிலிருந்து கிணற்று நீர் விநியோகம் செய்வதற்கு ஏதுவாக 3 Phase நீர்மூழ்கி மோட்டார் அதற்கான Wireகள் UPVC பைப்கள் மற்றும் 3 Phase Service கள் பேனல் போர்டுகள் புதிதாக பொருத்தி நல்ல முறையில் மோட்டரை இயக்கி மேற்படி பகுதிகளுக்கு கிணற்று நீர் விநியோகம் செய்வதற்கு ரூபாய்.2,25,000/– இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>**1.** மன்றம் அனுமதிக்கலாம்<br>**2.** இப்பணியினை குடிநீர் வழங்கல் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 9952/2023/இ3** | **தீர்மானம் எண்.787**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 11 | பொள்ளாச்சி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16 ல் உள்ள விப்ஜியார் வேலி நுழைவாயில் பகுதியில் உள்ள சிறுபாலம் பழுதடைந்து பொதுமக்கள் பயன்படுத்த முடியாமல் நிலையில் உள்ளது. மேற்காண் இடம் ஆய்வு செய்யப்பட்டதில் சிறுபாலம் மிகவும் பழுதடைந்து பொதுமக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதனையும் மற்றும் அதன் அருகில் வடிகால் சேதமடைந்துள்ளதால் பொதுமக்கள் பயன்பெறும் | **தீர்மானம் எண்.788**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| | வகையில் சிறுபாலம் மற்றும் வடிகால் அமைப்பதற்கு ரூ.4,10,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்காண் மதிப்பீட்டிற்கு இப்பணியை பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்:**9918/2023/இ1** | |
| 12 | பொள்ளாச்சி நகராட்சியில் நடைபெற உள்ள "மக்களுடன் முதல்வர்" முகாமிற்கு 5 இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளது. முகாம் நடைபெறும் இடங்களில் அனைத்து துறைகளின் அலுவலர்களும் பொது மக்களிடம் நேரிடையாக விண்ணப்பங்கள் பெற்று, அதனை கணினியில் பதிவேற்றம் செய்து விண்ணப்பம் பெறப்பட்டதற்கான அத்தாட்சி சீட்டு (Acknowledgement) வழங்கப்படும். இதற்கு கணினி மற்றும் உபகரணங்களை இயக்குவதற்கு 3 KVA – UPS மற்றும் Backup பவர் பேட்டரிஸ் அமைத்து தர உத்தரவிடப்பட்டுள்ளது. இதற்காக UPS மற்றும் பேட்டரீஸ் உபகரணங்கள் மற்றும் இதர அனைத்து செலவுகளுக்கும் (5Camps) உத்தேசமாக ரூ.10.00 இலட்சம் ஆகும். தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. இப்பணியினை பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 9944/2023/இ2** | **தீர்மானம் எண்.789 அனுமதிக்கப்பட்டது** |
| 13 | பொள்ளாச்சி நகராட்சியில் வார்டு எண்.33 ல் ஊத்துக்காடு ரோட்டில் ஏற்கனவே உள்ள 300 mm AC குடிநீர் பகிர்மான குழாய் அதிக அளவு கசிவு ஏற்படுவதால், அதனை சீர் செய்ய தார் சாலை அகழ்வு செய்யவேண்டியுள்ளது. தற்போது TURIF 23-24 ல் புதிய தார் சாலை அமைக்க பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளதால், ஏற்கனவே, உள்ள பழைய 300mm AC பகிர்மான குழாய்க்கு பதிலாக 200mm PVC பகிர்மான குழாய் அமைத்து அங்குள்ள குடியிருப்புகளுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்ய ரூபாய்.4,50,000/- இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. இப்பணியினை குடிநீர் வழங்கல் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.9617/2023/இ3** | **தீர்மானம் எண்.790 அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| 14 | பொள்ளாச்சி நகராட்சிக்குட்பட்ட 36 வார்டுகளில் உள்ள குடியிருப்பு மற்றும் வணிக வளாகங்களுக்கு நேராக சென்று (Door by Door) குடியிருப்புகளின் எண்ணிக்கை, குடிநீர் இணைப்புகள் எண்ணிக்கை, கழிவுநீர் குழாய் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதா என்ற விவரம் சேகரிப்பதன் மூலம் குடிநீர் இணைப்புகள் அனைத்தும் முறையாக உள்ளதா, வழங்கப்படாத கழிவுநீர் குழாய் இணைப்புகள் துரிதமாக வழங்க இயலும், இதன் மூலம் நகராட்சிக்கு வருவாய் ஏற்படுத்த இயலும். மேற்கண்ட Field Survey னை 15 தினங்களுக்குள் வெளியாட்களை கொண்டு துரிதமாக பணியை மேற்கொள்ள ரூ.2.30 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றத்தின் அங்கீகாரத்தை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கைகள் மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>**ந.க.எண்.9859/2023/இ1** | **தீர்மானம் எண்.791**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 15 | நகராட்சி எல்லைக்குட்பட்ட தேசிய நெடுஞ்சாலையும் (உடுமலை சாலை) இந்நகராட்சி வார்டு எண்.31 குமாரசாமி லே அவுட் செல்லும் சாலையும் சந்திக்கும் இடத்தில் சாலையின் கிழக்கு புறம் உள்ள கட்டிடத்தின் உரிமையாளர் தனது கட்டிடத்தில் செயல்பட்டு வரும் வணிக நிறுவனத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் வடிந்து செல்ல வசதி இல்லாததால் நகராட்சி சாலையில் அமைக்கப்பட்டுள்ள பாதாள சாக்கடை திட்ட குழாயில் இணைத்துக் கொள்ள அனுமதி கோரியுள்ளார்.<br>மேற்படி நிறுவனத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் நகராட்சி எல்லை சாலையில் (Boundary Road East of Kumarasamy layout) வடிகால் வசதி இல்லாத காரணத்தினால் சுகாதார கேட்டினை உருவாக்குகிறது.<br>விண்ணப்பதாரர் கோரியுள்ள கட்டிடத்தின் அமைவிடம் நகராட்சி எல்லையை ஒட்டி உள்ள மாக்கினாம்பட்டி ஊராட்சி எல்லைக்குள் அமைந்துள்ளதால் பொள்ளாச்சி நகராட்சிக்கு அக்கட்டிடத்திற்க்கான சொத்து வரி ஏதும் செலுத்தப்படுவதில்லை.<br>பொள்ளாச்சி நகராட்சியில் கட்டிட சொத்து வரி விதிப்பு ஏதும் இல்லாத நிலையில் நகராட்சி பாதாள சாக்கடை குழாயுடன் மேற்படி வணிக நிறுவனத்தின் கழிவுநீர் குழாயினை இணைப்பதின் வாயிலாக நகராட்சிக்கு முன்வைப்பு தொகை, விண்ணப்பக்கட்டணம், சேவை கட்டணம், இணைப்பு கட்டணம் ஆகியவற்றின் வாயிலாக வருவாய் ஏற்படும்.<br>எனவே நகராட்சியால் சொத்துவரி விதிக்கப்படாத நகராட்சி எல்லைக்கு மிக அருகில் 15 அடிக்குட்பட்ட கட்டிடப் பகுதி என்பதாலும், இதனை சிறப்பினமாக கருதி மேற்படி | **தீர்மானம் எண்.792**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| | கட்டிடத்திற்க்கு நகராட்சி பாதாள சாக்கடை குழாய் இணைப்பு பெற, நகராட்சிக்கு செலுத்த வேண்டிய முன் வைப்பு தொகை மேற்பார்வை கட்டணம் விண்ணப்பதொகை இணைப்பு கட்டணம் ஆகியவற்றை நடைமுறையில் உள்ள கட்டண விகிதப்படி செலுத்தி இணைப்பு வழங்க நகரமன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 6005/2023/இ1 | |

**(ஒப்பம்) திருமதி.ந.சியாமளா**
**நகர்மன்ற தலைவர்**
**பொள்ளாச்சி நகராட்சி**

**//உண்மை நகல்//**

**ஆணையாளர்**
**பொள்ளாச்சி நகராட்சி**